# திரு இருதய சபை



## 90 வது ஆண்டு நிறைவு மலர்

## 1905 - 1995

புனித யாகப்பர் ஆலயம்,

குருநகர்,

யாழ்ப்பாணம்.

திரு இருதய சபையின் ஆண்டு விழா


சிறக்க வாழ்த்துகிறோம்.



# லாவண்யா

## பல், மூக்குக் கண்ணாடி அகம்

**175, மின்சார நிலைய வீதி, — யாழ்ப்பாணம்.**




**உரிமையாளர். டாக்டர். றெஜி சொலமன்**

**வி. ரி. அன் சன்ஸ்,**


**3/7, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(எழிலகம் முன்)**

**கிளை:**

**காங்கேசன்துறை வீதி,**
**சுன்னாகம்.**
**(இலங்கை வங்கி அருகாமை)**



# "யேசுவின் திரு இருதயம்
# என்றும்
# மகிமைப்படுத்தப்படுவதாக"



அன்புடையீர்,

ஒன்பது தசாப்தங்களாக பணி புரிந்ததினால் பெருமையோடும் மன மகிழ்ச்சியோடும் இறைவனுக்கு நன்றி கூறி நிற்கும் திரு இருதய சபையாருக்கு எமது மன மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் அக்களிப்புக் கொள்கின்றோம். ஓர் பக்திச் சபையின் வாழ்வில் 90 வருடங்கள் – இரண்டு பரம்பரைகளை தனது பணி வாழ்வுக்குள் அரவணைத்து இறை பதம் நோக்கி நடாத்தி வந்து இருக்கிறதென்றால் அது பெருமைப்படக்கூடிய காரியமாகும்.

எனவே எமது பங்கு வாழ் மக்கள் திரு இருதய சபையின் செயல்பாடுகளின் நன்மைத் தனத்தை அறிந்தவர்களாகவும் உணர்ந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகையால் அவர்களோடு சேர்ந்து நாங்களும் எல்லாம் வல்ல திரு இருதயத்திற்கு நன்றி கூறுகின்றோம். எமது பங்கு மக்கள் இச்சபையில் சேர்ந்து திரு இருதய பக்தியை மக்கள் மத்தியிலே ஸ்தாபிக்க துணை புரிய முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். மீண்டும் திரு இருதய பக்தி சபையினருக்கு பங்குத் தந்தையர்களாகிய நாம் எமது நல் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு இருதயநாதர் உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக

பங்குக் குருமனை,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
1-7-1995

யேசுவின் சேவையில்
**R. M. G. நேசநாயகம்**
**M. V. E. ரவிசந்திரன்**
பங்குத் தந்தையர்கள்

★ ★ ★ ★ ★

## மகத்துவமுள்ள சபையின் செபம்

யேசுவின் மதுரமுள்ள திரு இருதயமே! அடியேன் எப்போதைக்கும் மென்மேலும் உம்மைச் சிநேகிக்க அநுக்கிரகம் செய்தருளும் ஆமென்.

★ ★ ★ ★ ★

## மலர் குழு

டோறஸ் இராசசிங்கம் — தலைவர் / ஆசிரியர்
J. R. A. செபஸ்ரியன் — உப தலைவர்
ப. யேசுதாசன் — செயலாளர்
மை. எமில் — பொருளாளர்
ச. ஜஸ்ரின் — உறுப்பினர்



# தலைவரின் பேனா முனையிலிருந்து...

''எல்லாம் யேசுவின்
திரு இருதய மகிமைக்காக''

அன்புசால் சகோதரர்களே,

''எவ்வகை வாழ்வும் எழிலுற இயங்கச் சபைகள், மன்றங்கள், கழகங்கள், குழுக்கள், இயக்கங்கள் போன்ற அமைப்புக்கள் இன்றியமையாதன'' இதனை உணர்ந்தே நம்முன்னோர் எமது பங்கில் 13 - 3 - 1905 ல் பணியாற்றிய பங்குத் தந்தை அருட்திரு. யோண் அலோசியஸ் அடிகளாரின் ஆதரவுடன் திரு இருதய சபையாகிய எமது சபையை ஆரம்பித்தனர்.

இப்பெருமைமிக்க சபையுடன் - சபையின் வாசிகசாலை கட்டப்படும் போது சிரமதானச் சிறுவனாக — வாசிகசாலை திறக்கப்பட்ட பின் வாசகர் வட்டச் சிறுவனாக - சபைக் கூட்டங்கள் நடைபெறும் போது பார்வையாளனாக — காரிய அங்கத்தவனாக — இணைந்தபின் சபையின் நிர்வாகக் குழுவில் பொறுப்புள்ள பல பதவிகளிலும் செயற்பட்டதன் பெரும் பேறாக சபையின் தற்போதய விழாவின் தலைவனாகத் திகழும் பெரும் பேற்றினை பெற்றதில் பேருவகையுறுகின்றேன். சபையுடன் பெற்றுக் கொண்ட 50 வருடத் தொடர்பினிலேயே நான் உத்தியோகத்தில் உயர முடிந்தது. சபை வாசிகசாலையிலிருந்த நூல்களின் பேருதவியினாலேயே எழுத்தாளருலகில் பிரவேசிக்கவும், பல பத்திரிகைகளின் ஆசிரியராகவும் மாற முடிந்தது. ஆகவே சபையினால் யான் பெற்ற இன்பம் ஏனையோரும் பெற ஆசிக்கின்றேன்.

இறைமகன் இயேசுவின் திரு இருதய இரக்கத்தால் சபை கடந்த 90 ஆண்டுகளில் இன்னல் இடுக்கண் இன்னோரன்ன இடர்பாடுகளிலிருந்தும் இப்போர்க்கால சூழலிலும் அமைதியாகச் செயற்பட முடிந்தது

எமது சபையைக்கட்டி வளர்ப்பதில் பாடுபட்டவர்கள் பலர். உயர்ந்தோர் பலர். பணித்தளத்தில் பயிற்சி பெற்றோர் பலர். ஒற்றுமையினால் சபை உன்னத பணிகள் ஆற்றிட உழைத்தோர் பலர். பிரதிபலன் எதிர்பாராது சபை அங்கத்தவர்கள் ஆற்றிய பணிகளின் பயனாலே, சபை தனது 90 வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்றது.

சபை தனது பணிகளை இடர் பாடுகளின் மத்தியிலும், தொடர்ந்து நடாத்த அருள் பாலித்த பேரன்புக்குரிய இறைவனுக்கு முதற்கண் இதயம் கனிந்த நன்றிகள்.

பணிகள் பல புரிந்த நம் முன்னோருக்கும்; பணித்தளத்தில் பணிபுரிவோருக்கும்; சபையின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த, கொடுத்து வரும் எமது பங்குத் தந்தையர்களுக்கும் இறையருளை இறைஞ்சி நிற்கின்றோம்.

90 வது ஆண்டு நிறைவினையொட்டிய இச்சிறு மலரினை உங்கள் மலர் கரங்களில் சமர்ப்பிப்பதில் பேருவகையுறுகின்றோம். இம் மலரில் எமக்குக் கிடைக்கப் பெற்ற விபரங்களை இரத்தினச் சுருக்கமாகவே கொடுத்துள்ளோம்.

இம்மலரினை வெளியிடுவதில் அன்புக் கரம் நீட்டியுதவிய சகலருக்கும் மனப்பூர்வமான நன்றிகள். இம்மலரில் ஏதாவது குற்றம் குறை காணப்படின் பெருமனதுடன் மன்னித்தருள்க.

சாதனை பல படைத்த சபையின் 90 வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

மதுரம் நிறைந்த யேசுவின் திரு இருதயம் வாழ்க!

மகத்துவமிக்க சபையின் பணிகள் தொடர எம் ஆசிகள்.

சபையின் சேவையிலுள்ள
**டோறஸ் இராசசிங்கம்**
தலைவர் / மலர் ஆசிரியர்,
திரு இருதய சபை மலர்க் குழு

புனித யாகப்பர் ஆலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
2 - 7 - 1995

# 90 ஆண்டுகளை பூர்த்தி செய்யும்

## யாழ்ப்பாணம் ஆர்ச். சந்தியோகுமையோர் ஆலயப் பங்கில் இயங்கும்

# திரு இருதய சபை

ஈழத்திருநாட்டின் தலைநகராய் திகழ்வது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் மத்தியிலே பிரமாண்டமாய்க் காட்சி தருவது புனித யாகப்பர் ஆலயம் என அழைக்கப்படும் சந்தியோகுமையோர் ஆலயமாகும். இவ்வாலயப்பங்கு தனித்து இயங்கத்தொடங்கி 103 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் ஆண்டு இதுவாகும். இவ்வித சிறப்பியல்புகளைக் கொண்டு இயங்கும் புனித யாகப்பர் ஆலயம் கடந்த 1993 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ம் திகதி விமானத் தாக்குதலுக்கு இலக்காகியதும், அதனையொட்டி நடாத்தப்பட்ட வரலாற்று புகழ்மிக்க மௌனப் பேரணியும் அனைவரும் அறிந்ததே.

இவ்வித சிறப்பு மிக்க பங்கின் மூத்த பக்திச்சபையாகத் திகழ்வது ''திரு இருதய சபை'' ஆகும்.

### சபையின் தோற்றம்

''சிறுவர்களையும், வாலிபர்களையும், பக்தியிலும் நன்நெறியில் பயிற்றுவிக்கவும், இவர்களின் ஓய்வான நேரங்களைக் குற்றமற்ற விளையாட்டில் செலவழிக்க உதவி செய்யும்'' சீரிய நோக்குடன் திரு இருதய சபை 1905-ம் ஆண்டு பங்குனி மாதம் 13-ம் திகதி அருட்திரு. யோன். அலோசியஸ் அடிகளால் ஆரம்பிக்கப்பட்டது. பெரும்பாலான குடும்பத் தலைவர்கள் இச் சபையுடன் இணைந்ததுடன், இளம் தலைமுறையினருக்கு வயது முதிர்ந்தோர் பலர் முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளனர்,

### அங்கத்துவம்

இச்சலையில் இப்பங்கைச் சேர்ந்த பெரும்பாலான குடும்பத் தலைவர்கள் இருவகை அங்கத்தவர்களாகச் செயற்பட்டனர். சபையின் செயற்பாட்டில் முழுமூச்சுடன் இயங்கியோர் காரிய அங்கத்தவர்களெனவும், வசதியீனம் காரணமாக கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாக வரமுடியாதவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் மகிமை அங்கத்தவர்களெனவும் அழைக்கப்பட்டனர்.

### ஆரம்ப கால நிகழ்வுகள்

சபையின் கூட்டங்கள் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு ஆலய வளவிலிருந்த சென். யேம்ஸ் ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் கூடும். கூட்டத்தை நினைவூட்ட காலை 9-30 மணிக்கு ஆலய மணி அடிக்கப்படும். இக் கூட்டங்களுக்கு பங்குத் தந்தை பிரசன்னமாயிருப்பார். அவ்வேளை பெருந்திரளான அங்கத்தவர்கள் ஒன்று கூடுவர்.

### ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு

கூட்டங்களில் சபை எடுக்கும் முடிவுகளை கருத்து முரண்பாடுகளை மறந்து சகலரும் ஒன்றுபட்டுச் செயற்படுத்தியமையால் இச் சபைக்கு பங்குத் தந்தையினதும், பங்கு மக்களதும் ஆதரவும் ஒத்துழைப்பும் தாராளமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

### சபையின் மூப்பர்கள்

மனுக்குலத்தை மீட்டு இரட்சித்த இயேசுபிரான் உயிர்த்தெழுந்த பின்னர், ஆவியின் கொடைகளைப் பெற்ற அப்போஸ்தலர்கள் ஒன்று கூடி, எவ்விதம் அப்போஸ்தலர்களையும் மூப்பர்களையும் தெரிந்தார்களோ, அதே போல் சபை ஆரம்பித்த பின்னர் சபை அங்கத்தவர்கள், தம் தலைவர்களாகத் தெரிந்து கொண்டவர்களை சபையின் மூப்பர்களென அழைத்துக் கௌரவித்துள்ளதாக அறியக்கிடக்கின்றது. மூப்பர்களின் பெயர்கள் வரிசைக் கிரமமாகக் கிடைக்காத காரணத்தால் அவர்களின் பெயர்களை தர முடியாதுள்ளது.

### சேவைக் களத்தில் சபை

சபை ஆரம்பித்த காலம் தொடக்கம் சேவைத் தளத்தில் பணிகள் பல ஆற்றியுள்ளது. சமய, சமூக, கல்வி, கலாச்சார, கலை - இயல், இசை, நாடகம், விளையாட்டு, அலங்காரம், சிரமதானம் போன்ற பல பணிகளை ஆற்றியுள்ளதுடன் தொடர்ந்தும் தன் பணிகளை ஆற்றி வருகின்றது.

### சமயப்பணி

திரு இருதய பக்தியை வளர்க்க, இல்லம் தோறும் திரு இருதய ஸ்தாபனங்களைச் செய்து வருகின்றது. திரு மணித்தியாலப் பக்தியை வளர்த்து வருகின்றது, சமயப்பணியில் பங்குத் தந்தையுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

### ஆலயச் சோடினை வேலைகள்

வழிபாடுகளைச் சிறப்பிக்க ஆலயச் சோடினை வேலைகளைச் சபை செய்து வந்துள்ளது. ஆலயச் சோடினைப் பொருட்களை பெறுவதில் முன்னின்று உழைத்து வந்துள்ளது.


### திருவிழாக்கள்

பாஸ்கா பண்டிகை, பாதுகாவலரின் திருநாள், கிறிஸ்மஸ் பண்டிகை போன்ற பல திருவிழாக்களின் போதும், முன்னர் மேற்றாசன ரீதியாக நடாத்தப்

பட்ட சற்பிரசாதச் சுற்றுப்பிரகாரப் பவனியை யொட்டியும், பத்திமாதா அன்னையினதும், மருதமடு மாதாவினதும் வருகையையொட்டியும், சோடினை வேலைகளைச் சபையே செய்து வந்துள்ளது.

### திருப்பாடுகளின் காட்சி போன்றவற்றில்

திருப்பாடுகளின் காட்சி, கடலில் படகில் சிலுவைப் பாதைக் காட்சிகள் ஆற்றுகைப் படுத்துவதிலும் சபை முன்னின்று சேவையாற்றியுள்ளது.



### சமூகப்பணி

சமூகத்தில் நற்பிரசைகளை உருவாக்கவும், சமூக சேவையாளர்களை உருவாக்கவும், சமூக சீர்திருத்தப் பணிகளிலும் சபை முன்னின்று உழைத்துள்ளது. பங்கில் புனித கிறிஸ்தோப்பர் கடற்சாரணர் குழு உருவாகவும், குழு அதன் பயிற்சி வகுப்புகளை நடாத்தவும் சபை தனது அறையை விட்டுக் கொடுத்துள்ளது, அக்குழு 33 வருட சேவையை சமூகத்துக்கு ஆற்ற உதவியுள்ளது.

சமூகத்தில் குருநகர் சனசமூக நிலையப் உருவாக சபையே மூலகர்த்தாவாக விளங்கியுள்ளது. குருநகர் இளைஞர் கலைக் கழகம் 10-06-1966 இல் உருவாக சபையின் அறையே பாவிக்க உதவியமையால் இக் கழகம் சமூகத்துக்குப் பல பணிகளைப் புரிய துணை புரிந்துள்ளது.

குருநகர் கலைக்கழகம் 06 05-1960 இல் உதயமாகவும், இக்கழகம் யாழ் நகரில் முதற் கடற் சாரணக் குழுவைத் தொடங்கவும், விறகுகாலையின் ஒரு பகுதியை விளையாட்டு மைதானமாக்க அரசுக்கு ஆலோசனை வழங்கி, அம்மைதானம் உருவாகவும், யாழ்நகரில் நவீன மீன் பிடிப் பயிற்சி நிலையம் உருவாக்கக் கோரிக்கை விடுக்கவும், அரசு அதனை செயற்படுத்த அரசினை வலியுறுத்தி அத்திட்டத்தினை அமுல்படுத்தச் செய்தது. இக் கழகத்தினூடாக அரசினர் றெக்கிளமேசன் வீடுகளின் வாடகையை கூட்ட முற்பட்டபோது அதனைக் கைவிடச் செய்ததுடன் வீடுகளை குடியிருப்பாளருக்கு வழங்க உரிய திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தொடர் நடவடிக்கை எடுத்தமையால் குடியிருப்பாளர் வீட்டுச் சொந்தக்காரர்களாக மாறினர். இக்கழகத்தினூடாக வீடுகட்ட இடமில்லாப் பிரச்சினையை ஓரளவு தீர்க்க பழைய பூங்கா வீதி வரை கடலில் அணை கட்டவும் தூண்டுகோலாயிருந்துள்ளது.

குருநகர் நடன நல்லிசைக் கலா மன்றம் தனது வகுப்புகளை நடாத்துவதற்கும், ஏனைய பக்திச்சபைகளின் கூட்டங்களை நடாத்தவும் சபை தனது அறையை விட்டுக் கொடுத்துச் சமூகப்பணிக்கு உதவியுள்ளது.

1970-ம் ஆண்டு 29-3-1970 ந் திகதி உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு குருநகர் சனசமூக நிலையத்தில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்ட போது சபையும் அதில் பங்குபற்றியுள்ளது. அன்று முதல் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியிலும் சபை அங்கம் வகுத்துக் குருநகரின் முன்னேற்றத்தில் பங்களிப்புச் செய்து வருகின்றது.

குருநகர் கூட்டுறவுக் கைத்தொழில் சங்கம் ஒன்று தோன்ற சபை எடுத்த முயற்சியின் பயனாக, சங்கம் ஒன்று தோன்றிய போதிலும், அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்மையால் இச் சங்கத்தை இடையில் கைவிடவும் நேர்ந்தது. இதனைப் போல் சபை பல சமூகப் பணிகளைச் செய்ய உதவியுள்ளது.

### கல்விப் பணி

கல்வி கற்க வசதியற்றவர்கள் இரவில் படிக்கவும், இராப் பாடசாலைகள் நடாத்தவும் சபை தனது அறையைப் பல முறை விட்டுக் கொடுத்துள்ளது.

### கலை கலாச்சாரப் பணிகள்

முத்தமிழை வளர்க்கவும் தமிழ் கலாச்சாரத்தை வளர்க்கவும் நாடகத்துறை ஊடாகப் பல பணிகளைச் சபை செய்துள்ளது.

பழைய சென். ஜேம்ஸ் ஆண் பாடசாலையில் நாடகங்கள் போடுவதற்கு ஏதுவான மேடையை அமைக்கவும், நாடகங்கள் போடுவதற்கான சீன்ஸ்சுகள், பக்கத்தட்டிகள், மேல் தட்டிகள், அலங்காரத் தூண்கள், உடைகள் போன்றவற்றை செய்து நாடகம் போடுபவர்களுக்கு உதவிக் கலை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியுள்ளது.

### நாடகக் கலை

பங்கிலுள்ள இசைக் கலைஞர்களையும், நாடகத்தில் ஆர்வமுள்ளவர்களையும் ஊக்குவிக்க சபை பல இசை, உரை நாடகங்களையும் உருவாக்கி பழைய ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் அரங்கேற்றியுள்ளது. புனித பிலோமினம்மாள் நாடகம், புனித தார்சிசியிஸ் நாடகம், புனித எஸ்தாக்கியார்

நாடகம், ஞானசவுந்தரி நாடகம் போன்றவற்றை மேடையேற்றியுள்ளது. இந்நாடகங்களில் சபை அங்கத்தவர்களாகத் திகழ்ந்த ச. சந்தியாப்பிள்ளை, பக்கிரி சின்னத்துரை, ஆ. றோமான், பிரகாசம் இராசம், செல்வசிங்கம் போன்ற பலர் நடித்துள்ளதாக அறியக் கிடக்கின்றது. இவற்றில் பெரும் பாலான நாடகங்கள் ஏசா அண்ணாவியாரால் பழக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

இந் நாடகங்களையொட்டியே சீன்ஸ்சுகள், தட்டிகள், அலங்காரப் பொருட்கள், மேடை அமைப்பு உபகரணங்கள் போன்றவை செய்யப்பட்டதாகவும் அவையே தேவைக்கேற்ப ஆலய அலங்காரங்களுக்கும் உபயோகிக்கப்பட்டனவென்றும் தெரிய வருகின்றது. மண்டபத்தில் கலரி போடுவதற்கான பொருட்களும் சபையிடம் இருந்து வந்துள்ளது.

நாடகங்கள் அரங்கேற்ற முன்வருவோருக்குச் சபை பக்கபலமாக இருந்து வந்துள்ளது. திருப்பாலத்துவ சபையினர் ''காசில்டா'' நாடகத்தை அரங்கேற்றிய போது பழைய திருப்பாலத்துவ சபை அங்கத்தவர்களாகத் திகழ்ந்த திரு இருதய சபையினர் தமது பொருட்களை பாவிக்க உதவியதுடன் நாடகப் பழக்கத்திலும் உதவியுள்ளனர். இந் நாடகத்தை அவ்வேளை சபையின் உபசெயலாளராக விளங்கியவரே (தற்போதய சபையின் தலைவர்) எழுதி நெறிப்படுத்தியுள்ளார். இந் நாடகம் **25 7-1955** லும் **7-1-1956** லும் அரங்கேற்றப்பட்டுள்ளது.

## விளையாட்டுக் கலை

சபையின் நோக்கத்தில் ''ஓய்வான நேரங்களைக் குற்றமற்ற விளையாட்டில் செலவழிக்க உதவி செய்யும்'' கருத்தினை ஆற்றுகைப்படுத்தச் சபை ஆரம்ப காலம் முதலே விளையாட்டுக் கலையை வளர்ப்பதிலும் ஊக்குவிப்பதிலும் பெரும் பணியாற்றியுள்ளது.

உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், ரெனிக்கோயிட் அடித்தல், வளையம் எறிதல், கரம் விளையாடல், டாம் விளையாடல், **304** சீட்டு விளையாடுதல், செஸ் விளையாடுதல், ரேபிள் ரென்னிஸ் போன்ற விளையாட்டுகளை இளைஞர்களும், பெரியோர்களும் தமது ஓய்வுநேர விளையாட்டுகளாக விளையாடவும் தமது நேரத்தை நல்வழியில் செலவழிக்கவும் சபை உதவி உள்ளது. இவ்விளையாட்டுகள் அனைத்தும் ஆலய வளவிலேயே விளையாட ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இவ் விளையாட்டுகளில் பங்குத் தந்தையர்களும் பங்கு பற்றி மக்களை ஊக்கப்படுத்தியுள்ளனர். இவ்விதம் ஊக்கப்படுத்தியவர்களில் காலஞ் சென்ற அருட் தந்தை எமில் பொமிக்கோ அடிகள், அருட்திரு. ஏ. சார்வே அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுகளில் அங்கத்தவர்கள் மட்டுமல்ல ஏனையோரும் பங்குபற்றச் சபை அனுமதித்திருந்தது.

உதைபந்தாட்டத்தில் மக்கள் ஆர்வம் காட்டியமையாலேயே ''யக்கோபயிற்ஸ் கிளப்'' உதயமாகச் சபை உந்துகோலாகவிருந்துள்ளது. இக்குழு உதைபந்தாட்டத்தில் பல சாதனைகளை உருவாக்கியது என அறியக் கிடக்கின்றது.

சபை அங்கத்தவர்கள் முன்னின்று சிரமதானத்தின் மூலம் கட்டிமுடித்த குருநகர் சன சமூக நிலையத்தில் விளையாட்டை ஊக்குவிக்கத் தம்வசமிருந்த பலவிளையாட்டுப் பொருட்களையும் வழங்கி உதவியுள்ளது. இப் பொருட்களில் கரப்பந்தாட்டம்வலை, பந்து, தூண்கள், கரம்போட் முதலியவற்றை வழங்கியுள்ளதாகத் தெரிகின்றது.

## பங்குச் சபை

பங்குத் தந்தையரின் வேண்டுகோளுக்கு இணங்க சபை அங்கத்தவர்கள் பங்குச் சபையிலும் இருந்து பங்குத் தந்தையருக்கு ஆலோசனையும் ஆதரவும் கொடுத்து பங்கை வளர்ப்பதில் பெரும் பங்காற்றியுள்ளனர்.

## வாசிகசாலை

இளம் வயதினரையும், பெரியோரையும் அவர்களின் ஓய்வு நேரத்தை நல்வழியில் செலவளிக்க சபை **1 4-1945** இல் ஒரு கட்டிடத்தை சிரமதானத்தின் மூலம் அமைத்து அதில் வாசிகசாலையையும், இரவல் கொடுக்கும் பகுதியையும் உருவாக்கி அறிவுப் பசியைப் போக்க ஆவன செய்துள்ளது. இதற்கு அருட்திரு. எமில் பொமிக்கே அடிகள் பேருதவி புரிந்துள்ளார். இதனை ஒட்டி அந்நிய செலவாணிக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்று இந்தியாவிலும், வெளியிடங்களிலும் இருந்து நூல்களையும், சஞ்சிகைகளையும் வருவித்து அறிவுப் பசியைப் போக்க பேருதவி சபை புரிந்துள்ளது.

இவ் வாசிகசாலைக் கட்டிடம் மேசன்மார்களாக விளங்கிய சபை அங்கத்தவர்களின் அனுசரணையுடன், அங்கத்தவர்கள் தொழில் மூலம் பெற்ற வருவாயைக் கொண்டும், அன்பளிப்புகளைக் கொண்டும் கட்டி முடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## தடைக் கற்கள்

*1966* - ம் ஆண்டிற்குப் பின்னர் பங்கில் பணியர்கள் சபை செய்து வந்த சேவைகளை அறியாது, சபைக்கு எதுவித ஒத்தாசையும் செய்யாத காரணத்தினால் சபையின் செயற்பாட்டில் தடைகள் ஏற்பட்டன. இருப்பினும் இக்காலத்திற்குப் பின்னர் வந்த பங்குத்தந்தை அருட்திரு. ம. இ. பயஸ் அடிகள் சபைக்கு முன்னுரிமை கொடுத்து சபையுடன் இணைந்து செயற் பட்டமையால் திருஇருதய

சுருபத்தை இல்லங்கள் தோறும் 24 மணித்தியால நேரம் ஆராதனைக்கு எடுத்துச்செல்ல ஏதுவாயிற்று. இது பங்கு மக்கள் மத்தியில் பக்தியில் விழிப்புணர்ச்சியைக் கொடுத்ததுடன் சபையின் வளர்ச்சிக்கு உந்து கோலாகவும் விளங்கியது.

### பக்திச் சபைகளின் ஒன்றியம்

சபையின் கோரிக்கையை ஏற்று அவ்வேளை பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு. ம. இ. பயஸ் அடிகள் பக்திச் சபைகளின் ஒன்றியத்தை அமைத்ததின் மூலம் பங்கில் பல பணிகளை ஆற்றக் கூடியதாக இருந்தது. பக்திச் சபைகள் ஒருங்கிணைந்து திறம்பட செயற்பட்டன. அருட்தந்தை பயஸ் அடிகளார் இடமாற்றம் பெற்ற பின்னர் பங்கில் பணியாற்றியயவர்கள் ஒன்றியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காத காரணத்தினால் ஒன்றியம் இருந்த செயற்படாது போயிற்று.

### கருத்து முரண்பாடு

சபை உறுப்பினர்கள் பாடுபட்டுத் தேடிய பல பொருட்கள் சபைக்குத் தெரியாமலே வேறு இடங்களுக்கு பாவனைக்கு வழங்கப்பட்ட காரணத்தினாலும், றெக்கிளமேசன் வீடுகளுக்கு மக்கள் குடியேறிய காரணத்தினாலும் பற்றுள்ள பல அங்கத்தவர்கள் சபையில் இருந்து ஒதுங்கவேண்டி ஏற்பட்டது.

### புதிதாக இணைந்தவர்கள்

அங்கத்தவர்கள் விரக்தி காரணமாக சபையில் இருந்து விலகவே சொற்ப காலம் வாசிகசாலை இயங்காது போயிற்று. இதனை அவதானித்த திருப்பாலத்துவ சபையின் வயது வந்த அங்கத்தவர்கள் சபையுடன் இணைந்து சபையை வளர்ப்பதில் முன்னின்று உழைத்தார்கள். இதனால் சபையில் புதிய தென்பு ஏற்பட்டது.

### எழுத்தாளர்களை உருவாக்கிய வாசிகசாலை

சபையினால் உருவாக்கப்பட்ட வாசிகசாலையின் இரவல் கொடுக்கும் பகுதியில் இருந்த நூல்களைப் படித்த பலர் எழுத்துலகில் பிரவேசித்தனர். அவர்களில் சிலர் சத்திய வேத பாதுகாவலன், கத்தோலிக்க சேவை, ஞானதூதன், திரு இருதய தூதன் போன்ற பத்திரிகைகளுக்கு விடயதானம் செய்து எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், நாடக ஆசிரியர்களாகவும் மாறியுள்ளனர். இதில் சபையின் தற்போதய தலைவரும் மறைந்த பி. மிக்கேல் பிள்ளை அவர்களும் குறிப்பிடத்தக்கவராவர்.

### பத்திரிகை ஆசிரியர்கள்

சபையின் நூல் நிலையத்தின் ஊடாக கற்ற பலர் எழுத்துத் துறையில் பிரவேசித்தார்கள் எனக் குறிப்பு பிட்டிருந்தோம். அவர்களில் ஒருவர் ''புத்தொளி'' (குருநகர் கலைக் கழக வெளியீடு) பத்திரிகையின் ஆசிரியராகவும், ''சங்கமுரசு''ப் பத்திரிகையின் (தொழிற் சங்க ஏடு) ஆசிரியராகவும் இயங்கியதுடன் இன்னொருவர் தற்பொழுது வெளிநாட்டில் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஆகவும் இயங்கி வருகின்றார். மேற்படி ''சங்கமுரசு'' பத்திரிகையின் ஆசிரியராகத் திகழ்ந்த சபை அங்கத்தவர் இப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் வழங்கி பலரின் பாராட்டைப் பெற்றவர் ஆவர்.

### ஆலய நூற்றாண்டு மலர்

ஆலயத்தின் நூற்றாண்டு நிறைவு வந்தபோது பங்கில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த சபை ஒரு தொண்டர் விழாக் குழுவை ஆரம்பித்தது. இக்குழுவில் சபையின் தலைவராக விளங்கிய காலஞ் சென்ற திரு. தா. எற்வேட் அவர்கள் தலைவராகவும் சபையின் செயலாளராக விளங்கியவர் (தற்போது சபையில் தலைவர்) இத் தொண்டர் குழுவின் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இக்குழுவே நூற்றாண்டுத் தொண்டர் விழாக் குழுவாகவும் மலர் குழுவாகவும் செயற்பட வேண்டியதாயிற்று. நூற்றாண்டு மலருக்கான விடயங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து தொகுத்து வெளியிடும் பெரும் பணியினை சபை அங்கத்தவர்களே மேற்கொண்டமையால் நூற்றாண்டு மலர் வெளியிட ஏதுவாயிற்று. இதுவும் எழுத்துலகில் சபையின் முயற்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

### 125-ம் ஆண்டு நிறைவின் போது

ஆலயத்தின் 125 ஆண்டு நிறைவு மலருக்கும் சபை அங்கத்தவர் விடயதானம் செய்து தமது எழுத்தாற்றலைக் காட்டியுள்ளனர்.

### சபை அங்கத்தவர்கள்

சபையின் அங்கத்தவர்களில் சிலர் தொழிலாளராகவும், ஏனையோரில் சிலர் கட்டிட வல்லுநர்களாகவும், ஆசிரியர்களாகவும் மராமத்துவத் துறையில் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களாகவும், மதுவரி பரிசோதகராகவும், மின்சார ஊழியர்களாகவும், ஆய்வுகூட ஆய்வாளராகவும், நீதி மன்ற ஊழியர்களாகவும், வர்த்தகத்துறை உத்தியோகத்தர்களாகவும், விசேட ஆணையாளராகவும், இன்னும் மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் பல துறைகளிலும் உத்தியோகம் பார்த்துள்ளனர். இவர்கள் உத்தியோக அலுவல்களுடன் வேறுபல துறைகளிலும் சமூகப் பணியாற்றியுள்ளனர். இலங்கையில் இரண்டாவதாகவும் யாழ்ப்பாணத்தில் முதலாவதாகவும் கடற்சாரணர் குழுவை ஆரம்பிக்க உதவியுள்ளனர். யாழ். மாவட்ட சாரணர் பயிற்சிக் குழுவில் அங்கம் வகிப்பதுடன் பிரதி மாவட்ட ஆணையாளராகவும் ஒருவர் திகழ்கின்றார். யாழ். மாவட்டத்தில் ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தை உருவாக்கி அதில் முதல் இரு வருடங்கள் கௌரவ பொருளாளராகவும் திதழ்ந்துள்ளனர். ஆசிரியர்களின் சங்கம் உருவாகவும் அதில் முக்கிய பங்கேற்றுள்ளனர். இவற்றைப் போல் சபை

அங்கத்தவர்கள் தமது உத்தியோகத்துடன் ஓய்வு நேரங்களில் சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருவது அவர்களின் பிறர் சிநேகப் பணிக்கு வலுவூட்டுவதாக அமைகின்றது.

அருட்திரு. F J ஸ்ரனிலாஸ் அடிகள் அருட்திரு. அல்பன் இராசசிங்க அடிகள் சபையின் பழைய அங்கத்தவர்களாவர் என்பது குறிப்பிடத் தக்கது.

## நிதி

சபையின் நிதி அங்கத்தவர்களிடமும் ஆதரவாளர்களிடமிருந்தும், அபிமானிகளிடமிருந்தும், பங்குத் தந்தையிடமிருந்தும் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. அங்கத்தவர்களிடமிருந்து சந்தாவாகவும் நிதி பெறப்பட்டுதுள்ள். ஆலயச் சோடினை வேலைகளுக்கு சபையின் சோடினைப் பொருட்களே பாவிக்கப்படுவதனாலும் சோடினை வேலைகளைச் சபையே செயது வந்தமையாலும் சபையின் சேவையைக் கணித்து பங்குத்தந்தை சபைக்கு அன்பளிப்பு வழங்குவது வழக்கம். இவ்விதம் பெறப்பட்ட தொகை ஆலயச் சோடினைப் பொருட்களான ஆலயத்தின் நடுவிலும் பக்கச் சுவர்களிலும் போடப்படும் சீலை மாலைகள் செய்வதற்கே சபை பாவித்துள்ளது. மெழுகுவர்த்தி விற்பனையால் கிடைக்கப்பெறும் தொகையும் சபையின் பொதுப்பணிக்குத் தேவையான பொருட்களை வாங்கவும் செய்விக்கவுமே பாவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக திரு இருதய ஸ்தாபனத்துக்குத் தேவையான திரு இருதயப் படம், அச்சடிக்கப்பட்ட அட்டைகள் போன்றவையும் இவ்விதம் கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்தே செய்விக்கப்பட்டன. முன்னர் தொழில் கொண்டு போயும் சபை நிதி சேர்தமையாலேயே வாசிகசாலையையும் சன சமூக நிலையத்தையும் சிரமதானத்தில் கட்டிமுடிக்க முடிந்தது.

சென்ற சில வருடங்களாக சபையின் ஆலயச் சோடினைப் பொருட்கள் பாவிக்கப்பட்ட போதிலும் பங்குத் தந்தையரிடமிருந்து எதுவித அன்பளிப்புகளும் சபைக்கு நிதியாகக் கிடைக்கப்பெறவில்லை. பழைய பங்குத் தந்தை அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகள் வாசிகசாலை இடிக்கப்பட்டதுக்கு மாற்றீடாக சிறிய தொகையை அன்பளிப்பாகத் தந்ததை சபை மறக்க முடியாது.

இதே போல் தற்போதைய பங்குத் தந்தையும் ஞான ஆலோசகருமான அருட்திரு. R. M. G. நேசநாயகம் அடிகளார் தமது அன்பாலும் ஆதரவாலும் சபை செய்து வரும் பணிகளுக்குத் தாமும் உதவிப் பங்குத் தந்தையுடன் சேர்ந்து கொடுத்துவரும் பேருதவிகளைச் சபை மறக்க முடியாது.

சபையின் தேவைகளுக்கு சபை ''நிதி மிகுந்தவர் நிதியுதவி தாரீர்! பொருள் மிகுந்தவர் பொருளுதவி தாரீர்!'' என பாவலன் பாவால் வேண்டி நிற்கின்றது.

## மெழுகுவர்த்திக் கடை

அருட்தந்தை பீற்றர் துரைரெட்ணம் அடிகள் அவர்கள் பங்குத் தந்தையாக வரும் வரை புனித யாகப்பர்ஆலயத்தில் மெழுகுவர்த்தி விற்பனைக்கென தனிக் கடை இருந்ததில்லை. இக் கடை ஒன்றினை கட்ட வேண்டுமெனச் சபை முடிவு செய்து பங்குத் தந்தையின் அனுமதியுடன் சபையின் செலவில் மெழுகுதிரிக் கடை ஒன்றினை சிரமதானத்தின் மூலம் கட்டித்திறந்தது. இதற்கு வாடகை விதிக்கப் பட்டது. அதற்கேற்பவாடகையும் செலுத்தப்பட்டது. கடை இடிக்கப்பட்டு பெரிதாகக் கட்டவிருப்பது போன்ற காரணங்களுக்காகச் சபை இதிலிருந்து விலகிக் கொண்டது.

அருட்தந்தை பி. எம். இம்மானுவேல் அடிகள் கடையை இடிப்பித்து பெரிதாகக் கட்டி, வேறு ஆட்களைக் கொண்டு கடையை நடாத்த ஏற்பாடு செய்தார். புதுவருடப் பிறப்பன்று மெழுகுதிரி விற்பனையைச் சபையே தொடர்ந்து நடாத்தவும் அதில் பெறப்படும் நிதியை சபையின் தேவைகளுக்குப் பிரயோசனப்படுத்தவும் அருட்திரு. P. M. இம்மானுவேல் அடிகள் அனுமதி வழங்கி சபையை ஊக்குவித்துள்ளார். அதனை தற்போதய பங்குத்தந்தை அவர்களும் தொடர்ந்து செய்து வருவதைச் சபை நன்றியுடன் நினைவு கூருகின்றது.

## மண்டதீவுப் படுகொலை

மண்டதீவில் நிகழ்ந்த படுகொலையின் போது சபை அதன் மகிமை அங்கத்தவர்களில் பலரை இழக்க நேரிட்டது.

## சபைக்கு ஏற்பட்ட பேரிழப்பு

சபை அங்கத்தவர்களாயிருந்த மேசன்மாரால் சிரமதானத்தின் மூலம் சபை பெற்ற அன்பளிப்புக்களைக் கொண்டு கட்டப்பட்டு, 1 1-1945 - ஆம் திகதிமுதல் நடாத்தப்பட்டு வந்த திரு இருதய வாசிகசாலை, திரு இருதய சபையின் அறையாக 40 வருடங்களுக்கு மேலாக பாவிக்கப்பட்டு வந்த கட்டிடம் பங்குத் தந்தையாக விளங்கிய அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகள் காலத்தில் சபைக்கு அறிவிக்காமலே இடிக்கப்பட்டமையால் சபை பல இழப்புகளைச் சந்திக நேரிட்டது. சபையின் சகல செயற்பாடுகளும் அதனால் ஸ்தம்பிதம் அடைந்தன. சபை பல பொருட்களையும் இழந்ததுடன் கூட்டங்களை ஆலயப்படிகளில் நடாத்தவும் நேரிட்டது. சபையின் அனுசரணையுடன் இயங்கிய பல சமூக இயக்கங்களும் அவற்றின் செயற்பாடுகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

## இழப்பை ஈடுசெய்ய

சபைக்கு ஏற்பட்ட பேரிழப்பை ஈடு செய்ய அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகளார் புதிதாக அமைக்கப்பட்ட புனித யாகப்பர் மண்டபத்தில் ஒரு அறையை சபைக்கு ஒதுக்கித் தந்தார். வாசிக

சாலையை மண்டபத்தின் ஒரு பகுதியில் நடாத்த வும் அனுமதித்தார். இம் மண்டபமும் ஆலயத் தாக்கு தலின் போது பாதிப்புக்குள்ளாயிற்று.

சபை அறையை இழந்தமையால் தனது தனித்துவத்தை இழந்தது. அதனை ஈடு செய்ய பங்குத் தந்தை பி. எம். இம்மானுவேல் அடிகளார் ஆயிரக்கணக்கான கொங்கிறீற் கற்களை வாசிக சாலை கட்டுவதற்கு அன்பளிப்பாகத் தந்தார். சபை அக் கற்களை ஆலயப்புனரமைப்புக்கு விட்டுக் கொடுத்துள்ளது குறிப்பிடத் தக்கது.

### வாசிகசாலையை இயங்க வைக்க

வாசிகசாலையை இயக்கச் சபைக்கு ஆதரவு வழங்கிய புதிய பங்குத் தந்தை அருட்திரு. R. M. G. நேசநாயகம் அடிகளார் குருமனையில் முன் விறாந் தையை ஒதுக்கி வாசிகசாலையை இயங்க உதவி வரு வதுடன் அதன் வளர்ச்சியில் பேரார்வம் காட்டி வருகின்றார்.

### இரவல் கொடுக்கும் பகுதி

சபையால் நடாத்தப்பட்டு வந்த இரவல் கொடுக் கும் பகுதிக்குரிய பல புத்தகங்கள் எடுத்துச் சென்ற வர்களால் இதுவரை வாசகர்களின் பாவனைக்கு திருப்பி ஒப்படைக்கப்படாமையால் இப்பகுதி இயங்கு வதில் தடங்கல் ஏற்பட்டுள்து.

### போட்டிகள்

75 வது ஆண்டு நிறைவையொட்டி சபை சிறுவர் களுக்கான விளையாட்டுப் போட்டியையும், பேச் சுப் போட்டியையும் நடாத்தியுள்ளது. அண்மைக் காலங்களில் பசாண் வாசிப்புப் போட்டியையும், தேவாரம், தமிழிசைபாடல் போட்டிகளையும் நடாத்தி வருகின்றது.

### தற்போதைய செயற்பாடுகள்

பல இழப்புகளின் மத்தியிலும் சபை தன் செயற் பாடுகளை ஆற்றுகைப்படுத்தி வருகின்றது. திருஇரு தய பக்தியை வளர்க்க இல்லங்கள் தோறும் திருஇரு தய ஸ்தாபானங்களைச் செய்யப்பட்டு வருகின்றது. வாசிகசாலையை தொடர்ந்து இயக்கி வருகின்றது. இரவல் கொடுக்கும் பகுதியை இயங்க வைக்க ஒழுங்கு கள் செய்யப்பட்டு வருகின்றன. சபையின் நோக் கத்தை அடைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. புதிய இளம் அங்கத்தவர்களைச் சபையுடன் இணைக்க சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சபையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தப் பங்குத் தந்தை அவர்களும், உதவிப் பங்குத் தந்தை அவர்களும், ஆதரவு வழங்கி வருவதனால் சபை மேலும் வளர்ந்து 100 வது ஆண்டினை விரைவிற் காண இறையருள் கிடைப்பதாக.

சபையின் செயற்பாடுகளிலிருந்து வேத விற்பன் னர் கூறிய ''பக்திச் சபைகள் பங்கின் கண்ணாடி கள்'' என்பது புலாகுகின்றதல்லவா? எனவே சிறப்பு மிக்கபல பணிகளை ஆற்ற சபைக்கும், சபை அங் கத்தவர்களும் திருஇருதயநாதரின் இரக்க மிகுந்த அருளைச் சபை ஆசித்து நிற்கின்றது.

வாழ்க யேசுவின் திருநாமம்!

வளர்க திருஇருதயப் பக்தி.


★ ★ ★ ★ ★

**வாசிகசாலையின் நூல்களை வைத்திருப்பவர்களுக்கு வேண்டுகோள்**

சபையின் இரவல் கொடுக்கும் பகுதியை இயக்கச் சபையின் முத்திரையுடன் பெற்றுச் சென்ற பெறு மதிமிக்க நூல்களை மற்றவர்களும் உபயோகிக்க சபையின் வாசிகசாலைத் தலைவரிடம் கையளித்து உதவுக. நூல்களை வைத்திருப்போர் திருப்பித் தருக.

### அபிப்பிராய வாக்கெடுப்பு


கைத்தொழிலா? மீன் பிடித்தொழிலா? அவசியம் என அறிய 15 க்கும் 45 வயதுக்கு பட்டோருக்கிடையில் குருநகர் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின ரால் சபையின் உதவியுடன் 1952 ம் ஆண்டு அபிப்பிராய வாக்கெடுப்பு எடுக்கப் பட்டது அதில் கைத்தொழிலும் அவசியம் என்ற கருத்து வெற்றிபெற்றது.



எமது ஆன்ம ஆலோசகர்

**அருட்திரு. R. M. G. நேசநாயகம் அடிகள்**

## எமது சபை உறுப்பினர்கள்



**முன்வரிசை :** மி. எமில் (பொருளாளர்), J. R. A. செபஸ்ரியன் (உபதலைவர்) டோறஸ் இராசசிங்கம் (தலைவர்) ப. யேசுதாசன் (செயலாளர்) ஞா. பிரான்சிஸ் (வாசிகசாலைத் தலைவர்) ச. மரியதாசன் (செபதலைவர்)

**2 ம் வரிசை :** ச. யஸ்ரின், யோ. யோண் பப்ரிஸ்ற், பி. ஸ்ரனிஸ்லஸ், A. F. சேவியர், J. D. A. இராசசிங்கம், மி. அஞ்சலோ, அ. அலெக்சி.., ம. அன்ரனி

**3 ம் வரிசை :** அ. றி. யோண் யோகராசா உப செயலாளர்), S. N. பயஸ், அ. செலஸ்ரீன், சந்தியோ மனவல் கி. அல்வீனஸ், அ. எமிலியானுஸ்

**பின் வரிசை :** P. M. யேக்கப், பா. சிங்கராயர்

# பக்திச் சபைகளா? பணிச் சபைகளா?

'பக்தி' என்றதும் எமது கண்முன்னே வருவது ஆலயமாகும். அத்துடன் குவித்த கரங்களும், மூடிய விழிகளும் இயந்திரமாய் இதழ்கள் முணு முணுக்கும் மனனச் செபங்களும், பாடல்களும், பெருந்திருவிழாக்களும், ஆடம்பரக் கொண் டாட்டங்களும்... மனத்திரையில் பின்னணியில் ஓடிக் கொண்டிருக்கும். ஆனால் ஆண்டவரோ!

'கணக்கற்ற உங்கள் பலிகள் நமக்கு எதற்காக' என்கிறார். 'இனிமேல் பயனில்லை காணிக்கைகளை கொணர வேண்டாம் நீங்கள் காட்டும் தூபம் எனக்கு அருவருப்பையே தருகிறது' என்றும்

உங்களது அமவாசை திருவிழாக் கொண்டாட்டங்களை நாம் முழு உள் ளத்தோடு வெறுத்துத் தள்ளுகிறோம் நம்மை நோக்கி நீங்கள் கைகளை உயர்த்தும் போது உங்களிடமிருந்து நம் முகத்தைத் திருப்பிக் கொள்கிறோம் என்றும் கூறுகிறார்.

''உங்களைச் சுத்திகரியுங்கள், தூய்மைப்படுத்துங்கள், நம் கண் முன் பிருந்து உங்கள் தீச்செயல்களை அகற்றுங்கள் தீமை செய்வதை விட்டு ஒழியுங்கள் நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். நீதியைத் தேடுங்கள். ஒடுக்கப்பட்டவ னுக்கு உதவி செய்யுங்கள். திக்கற்ற பிள்ளைக்கு நீதி வழங்குங்கள். (இசை: 1, 11-17) கைம்பெண்ணுக்காக வழக்கு நடத்துங்கள்'' என்று சவாலை விடுக்கிறார். ஆக பக்தி மட்டுமல்ல பணியும் முக்கியமென ஆண்டவர் சொல்கிறார்

திரு இருதய சபையின் வரலாற்றை நேர்ப் பேச்சிலும், எழுத்திலும் புரட் டிப் பார்க்க முனைந்த போது அது பக்தி முதிர்ச்சியும் பணியார்வமும் கொண்டு இயங்கியதை அறிய முடிகிறது.

மகிழ்கிறேன்.

வாழ்த்துகிறேன்.

இறைவன் தொடர்ந்தும் நல்லாசீர் நல்கட்டும்.

அருட்திரு. ம வி இ இரவிச்சந்திரன் அடிகள்

★ ★ ★ ★ ★

**சபை நிர்வாகிகள் 1994/95**

| | |
|---|---|
| டோறஸ் இராசசிங்கம் | — தலைவர் |
| J. R. A. செபஸ்ரியன் | உபதலைவர் |
| ப யேசுதாசன் | — கௌரவ செயலாளர் |
| அ றி யோண் யோகராசன் | — உபசெயலாளர் |
| மை. எமில் | — கௌரவ பொருளாளர் |
| செபத்தலைவர் | — ச. மரியதாசன் (ஏணஸ்ற்) |
| வாசிகசாலைத் தலைவர் | — ஞா. பிரான்சிஸ் |

# கடவுள் எம்மை அன்புசெய்யும் விதம்

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் இறைவனது அருள் இல்லா விட்டால் பிழைத்திருக்க முடியாது. அவரே எம்மைக் காத்து வழி நடத்துகின்றார். அவரது கருணையாலேயே நாம் உயிருடன் இருக்கின்றோம்

*''பிறந்தநாளிலேயே நீ வெறுத்து ஒதுக்கப்பட்டாய். அவ்வழியாய்க் கடந்து போன நாமோ நீ பிழைத்திரு என்றோம்.'' எசெக். 16:6.*

இறைவன் எம்மை நன்கு அறிந்திருக்கின்றார். அவர் எம்மைப் பாதுகாத்து வழி நடத்துகின்றார்,

*''ஆண்டவரே! நீர் என்னைப் பரிசோதித்து அறிந்திருக்கிறீர்.'' சங். 138:1.*

ஆண்டவர் பரிசுத்தராய் இருப்பது போல நாமும் எமது வாழ்வில் தூய மனதுள்ளவராய் இருக்க வேண்டும் என ஆசிக்கின்றார். அவர் எம்மை அன்பு செய்கின்றார்.

*''நாம் பரிசுத்தராய் இருப்பதால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்.'' லேவி. 19:2.*

ஆண்டவர் எமக்குக் கிடைக்கப் பெற்ற உன்னதமான பரிசு.

*''நாம் உன் அடைக்கலமும் மிகவும் சிறந்த உன் பரிசுமாய் இருக்கிறோம்,'' ஆதி. 15;1.*

கடவுள் எம்மை மதிப்பதனால் மாண்புடன் எம்மை அன்பு செய்கின்றார்.

*''நமது கண்ணுக்கு நீ விலையேறப் பெற்றவன். மதிப்புக்குரியவன். உன் மேல் மிகுந்த அன்பு கொண்டோம்.'' இசை. 4:3.*

நாம் இறைவனுக்குச் சொந்தம். அவர் எமக்கு என்ன சோதனை வந்தாலும் அஞ்சாது அவற்றை எதிர் கொள்ளச் செய்கின்றார்.

*''நாமே உன்னை மீட்டோம். உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ நமக்கே சொந்தம்.'' 43:1.*

எம்மைப் பெற்ற அன்னைக்கு எம்மீதுள்ள அன்பு குறைய மாட்டாது. அவள் எம்மை சகல தீங்குகளிலும் இருந்து காப்பாற்றுகின்றாள். அவளின் மேலான அன்பை இறைவன் எம்மீது பொழிகின்றார்

*''பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ?.... இதோ நம் கைகளில் உன்னைப் பொறித்துள்ளோம். இசை. 49:15.*

இறைவன் எம்மேல் உள்ள அன்பினால் எமது குறைகளைத் தம்மேல் ஏற்றுக் கொண்டு எமது பாவத்திற்காகப் பலியாகியதன் மூலம் மெருகூட்டியுள்ளார். நமக்காகவே அனைத்துச் சுமைகளையும் தம்மேல் சுமந்து கொண்டார்:

*''மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக் கொண்டார்.'' இசை. 53:4.*

ஆண்டவரின் அன்பு எம்மீது எக்காலமும் நிலை கொண்டு அசையாதிருக்கும்.

*''உன்மீது கொண்ட அன்பு நிலை பெயராதிருக்கும்.'' இசை. 54:10.*

நேர்மையிலும் நீதியிலும் எம்மை வழிநடத்த கடவுள் எம்மோடு இரண்டறக் கலந்திருக்கின்றார். அவரது அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்.

*''முடிவில்லாக் காலத்திற்கும் உன்னை மணம் முடிப்போம். ஓசே. 2:19.*

மாசற்ற அன்பை மனுக்குலத்தின் மீது வாரி வழங்கும் வள்ளலான கடவுளின் கருணையை சுவைத்து நுகர்வோமாக.

இ. டோ.

★ ★ ★ ★ ★

## ஆலயப் பேரழிவும் அனர்த்தங்களும்

பழமையும் புதுமையுமிக்க யாழ் சந்தியோகுமையோர் ஆலயம் 13-11-1993 ந் திகதி சனிக்கிழமை காலை 7-20 மணிக்கு விமானத் தாக்குதலுக்குள்ளாயிற்று.

அவ்வேளை செல்வி. யோண் வெண்ணிலா (27 வயது) சிங்கராயர் கலோஜி (8 வயது) குருசு அக்கினேஸ் (83 வயது) திருமதி. தார்சீசியஸ் மேரி ஜெயசிலி (55 வயது) செல்வி மதுரநாயகம் சிந்துஜா (2 வயது) யோண் சேவியர் (53 வயது) கபிரியேல் அன்ரன் (48 வயது) தோமஸ் பெனடிற் (50 வயது) திருமதி அன்ரன் புஸ்பலீலா (43 வயது) ஆகிய 9 பேர் மரணமாகினர், 24 பேர் காயம் அடைந்தனர்.

# பக்தி முயற்சிகளில் சபை

எமது திரு இருதய சபையானது 90 வது ஆண்டினை கொண்டாடும் இவ்வேளையில் நாம் அனைவரும் மகிழ்வுடன் இன்புறுகின்றோம். எமது ஆலயப் பங்கின் முதியோர்களின் தெய்வபக்தி, அன்புள்ளம் கொண்ட ஒன்றுகூடல் பங்களிப்பின் விளைவாக எமக்கோர் பக்திசபையை உருவாக்கித் தந்துள்ளனர். அதற்கேற்ப எமது ஒழுக்கமான முன்னோர்களாலும், ஆக்கமும் ஊக்கமுள்ள காலம் சென்ற உறுப்பினர்களாலும் எமது பங்கின் பெருமையை நிலைநாட்ட, நிகழ்கால அங்கத்தவர்களாலும் திரு இருதயநாதரின் உதவியோடும், தூய ஆவியின் வழிகாட்டலினாலும் அதன் வளர்ச்சியின் முதிர்விலும் ''எனதுபெயரால் ஒன்றுகூடுபவர்கள், ஜெபிப்பவர்கள் மத்தியில் நான் இருக்கின்றேன்'' என்று கூறிய யேசுவின் தெய்வீக வாக்கிற்கிணங்க என்றுமே அவர் புகழ்பாடி, அன்பு வழி நடக்க அவரை வேண்டி நாடி நிற்கின்றது.

அன்பின் உருவான திவ்விய நற்கருணை நாதரே! நாம் உம்மை ஆராதிக்கின்றோம். வணங்குகின்றோம். எம்மை ஆளும் தெய்வமே நீரே எமக்கு வழிகாட்டி.

எமது சபையானது தனது பணிக்கு புதியவர்கள் வரவை அன்பாக வரவேற்றது. அதனால் அடக்கமும் திறமையும் உள்ளவர்களை சபையானது பெற்றமை அதன் வளர்ச்சிக்கே அடிகோலாக அமைந்தது. பக்தி சபைகள் மூலம் அங்கத்தவர்களின் உள்ளங்கள் இறைவனுக்கு ஏற்புடைய பண்புகளால் பக்குவமடைகின்றது. இதன் பயனாக தெய்வபக்தி, புரிந்துணர்வு, மன்னிக்கும் மனப்பான்மை, அன்பு செய்தல் போன்ற மேலான உறவுகள் ஊற்றெடுக்கும் பலன்களை எம்மால் உணர முடிகின்றது.

எமது அழகுமிக்க ஆலயத்தில் நடைபெற்று வந்த மாதத்தின் முதல் வியாழன் இராவிழிப்பு வழிபாட்டில் திவ்ய நற்கருணை நாதரின் பக்தி முயற்சியில் அங்கத்தவர் யாவரும் கலந்து கொண்டு ''என்னோடு கூட ஒரு மணி நேரம் விழித்திருக்க உங்களால் முடியாதோ!'' என்ற எமது ஆண்டவரின் மனம் நொந்த வேதனையில் பங்குள்ளவர்களாக அமைந்தது. எமது மன ஆறுதலையும் தேறுதலையும் தந்துள்ள நிகழ்வுகள் ஆகும்.

எமது ஆலய வழிபாடுகள் சிறப்புற ஆர்வமுள்ள அலங்கரிப்பு வேலைகளை மனமுவந்து அளித்துள்ளது. ஆலய அலங்கரிப்பை முக்கிய பணியாக ஏற்ற நாம் எமது உள்ளங்களை அவர் பக்கம் சாய்த்துவிட மறந்ததில்லை. அதனால்தான் 'உள்ளக் கமலம் வேண்டி' அவர் பணியைப் பின் தொடர்கின்றோம்.

எமது ஆலய வருடாந்த விழாக்களிலும், பெரிய வியாழன் திவ்ய நற்கருணை நாதரின் பவனியிலும் பக்தியுடன் சுலந்து பரவசமூட்டும் சிறப்புக்களை நாம் என்றுமே மறந்துவிட முடியாது. வருடா வருடம் பெரிய வெள்ளிக்கிழமையான இப் புனித நாளில் சிலுவை மரத்தில் மரித்த யேசுவின் திரு உடலை இறங்குவதற்கு சபையின் அங்கத்தவர்கள் முன்னின்று பங்கு கொண்டவர்கள் ஆவர். தபக்காலத்தில் பங்கு மக்களின் ஞான வளர்ச்சிக்கான வியாகுல பிரசங்க வாசிப்புப் போட்டிகளை நடாத்தி இறைவனின் பக்திப் பிரசன்னத்தை ஊக்குவித்த மகிமை திரு இருதய நாதரின் சபையே சாரும்.

ஆலய பங்குத் தந்தையர்கள் எமது சபையை வளர்க்க பெரும் விருப்பு உள்ளவர்களாக விளங்கினார்கள். சபையின் பக்தி முயற்சிகளில் யாழ். மறைமாவட்டப் பங்குகளின் ஒருங்கே அமையப் பெற்ற திவ்ய நற்கருணை நாதரின் பகிரங்க பவனி விழாவிற்கான வரவேற்பினை எமது ஆலய முன்றலில் அலங்கரிப்பு வேலைகளை ஆற்றிய சேவை எமது ஆண்டவரில் நேசத்தையும் பெருமையையும் காட்டுபவைகளாகவே அமைந்திருந்தன.

யேசுவின் திரு இருதய ஸ்தாபனத்தை எமது குடும்பங்களில் ஸ்தாபித்ததின் ஞாபகமாக திரு இருதய நாதரின் படத்தையும் மடலையும் அன்பளிப்புச் செய்து ஒவ்வொரு இல்லங்களிலும் ''இதோ உங்கள் இராசாவாக'' அவரை வரவேற்று அவருக்கு எம்மை முழுமையாக அர்ப்பணித்து ''நீரின்றி நான் வாழுதல் அரிது'' என்ற தத்துவத்தில் பக்தி முயற்சியை வளர்த்த பணியினை எமது பங்கின் பக்தியுள்ள மக்கள் யாவரும் நன்கு அறிவர். திரு இருதய நாதரின் திருச்சுரூப வழிபாடுகளை இல்லங்கள் தோறும் பக்தியுடன் நடத்தியும் திரு இருதய ஸ்தாபகங்களைப் புதுப்பித்தும் 'அஞ்சாதே நான் என்றும் உன்னோடு' என்ற ஆண்டவரின் நினைவுகளின் பாதையில் அனைவரையும் வழிநடக்க முயற்சி செய்ததும் எமது சபையின் பெருமை எமது ஆண்டவருக்கே உரித்தானது.

எமது பங்கில் மருதமடு அன்னையின் சிறப்பான வருகையையும் வரவேற்ற பொறுப்பினை ஏற்ற சபையாக இது விளங்கியது. முற்றுப்பெறாத ஆலய கோபுர கட்டிடவேலைகளுக்கு உறுதுணையாய் இருந்தது. தபக்காலப் பக்தி முயற்சியாக பங்குத் தந்தையின் உதவியுடன் கடலில் படகில் திருச்சிலுவைப் பாதையின் காட்சிகளை பக்தியுடன் நடத்திய பெரும் பங்கு எமது சபையையே சார்ந்தது. கிறிஸ்து பிறப்பு விழாக்களில் ஆலயத்தில் திவ்ய பாலன் குடிலை அமைப்பதிலும் ஆலய சுத்திகரிப்பு வேலை

களில் முன்னின்று உழைத்தது எமது ஒன்றுபட்ட வளர்ச்சியின் உயர்வையே காட்டுகிறது.

ஆலய வழிபாடுகளில், ஞாயிறு திருப்பலியில் ஞான வாசகங்களை வாசிப்பதிலும், பலிப்பூசைக்கான நிதி சேகரிப்பதிலும், தேவைப்படும் வேளையில் பங்குத் தந்தைக்கு உதவியாக பலிப்பூசையில் பங்கு கொள்வதும் எமது பெரும் விருப்புகளாக அமைந்தது.

திரு இருதயநாதரின் மாதமாகிய ஆனி மாதத்தில் வருடா வருடம் எமது சபையின் பெரும் விழாவினைக் கொண்டாடும் நாம் நல்ல செயற்பாடுகளையும் ஆலய பக்தியுள்ள பொறுப்புக்களை சுமந்தவர்களாக எதையும் தாங்கும் இதய சுத்தியுடன் செயலாற்றிவரும் அங்கத்தவர்கள் யாவரையும் திரு இருதய நாதரின் அன்பின் சுடர் ஒளியால் ஆசி பெற்று அன்றும் இன்றும் என்றும் வாழும் வரத்தை அருள எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ச. ஜஸ்ரின்

★ ★ ★ ★ ★

## ஏசா அண்ணாவியார்

இவரது முழுப்பெயர் அவுறான் ஞானப்பிரகாசம் சின்னத்துரை. இவரை ஏசா அண்ணாவி என்றே மக்கள் அன்பாக அழைப்பர்.

இவர் கலை வாழும் குருநகரின் நாட்டுக் கூத்தின் நாயகனாகத் திகழ்ந்தவர் மறைந்த ஏசா அண்ணாவியார் கல்வி அறிவில் குறைந்திருந்தாலும் நாடகம், நாட்டுக் கூத்தினைக் கற்றுக்கொடுக்கும் கலையில் விற்பன்னராகத் திகழ்ந்தவர். ஐம்பதுக்கு மேற்பட்ட நாட்டுக் கூத்துகளை பயிற்றுவித்து அதன் மூலம் குருநகரின் புகழ் பூத்த அண்ணாவிமார்களான அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை, நட்டுவன் அந்தோனிப்பிள்ளை ஆகியோரை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

சபையினால் நடாத்தப்பட்ட பெரும்பாலான நாடகங்கள் இவராலேயே பழக்கப்பட்டுள்ளன உயிர்த்த ஞாயிறன்று சுரூபப் பவனிகளில் இவரால் பாடப்பட்ட எழுச்சிக் கீதங்கள் மூலம் மக்கள் மனதுகளை கொள்ளை கொண்டுள்ளார். இவர் சபையின் அங்கத்தவராகத் திகழ்ந்தவர்.

★ ★ ★ ★ ★

## சுரபூஷணம் P. S.

ஏசா அண்ணாவியாரின் மாணவனாக இருந்த அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை முறையாக இந்தியாவில் சங்கீதம் கற்று இசையில் சிறந்து விளங்கினார்.

1938 ம் ஆண்டு இந்தியாவிலிருந்து வந்த இசைக் குழுவினருடன் சேர்ந்து யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் (தற்போது யாழ். பொது நூலகம் அமைந்துள்ள இடத்தில்) இசை நாடகமான ஞானசவுந்தரியில் கதாநாயகனாக பிலேந்திரன் பாத்திரமேற்று நடித்து பலரது பாராட்டைப் பெற்றதோடு சுரபூஷபனம் என்ற பட்டத்தை பெற்றார். இவரது காலத்தில் சங்கீத நாயகர்களான புத்துவாட்டிசோமு, இணுவில் சொக்கலிங்கம் போன்றோரோடு சைவ ஆலயங்களில் சுரவரிசை பாடுவதற்கு இவர் பலதடவை அழைக்கப்பட்டு பாராட்டையும் பெற்றவர். இசை நாடகங்களில் பாத்திரமேற்று நடிப்பதுடன் நில்லாது நாட்டுக் கூத்துகளிலும் சிறந்து விளங்கினார். சபை அங்கத்தவராக விளங்கிய இவர் தேவ சகாயம்பிள்ளை, எஸ்தாக்கியார் நாட்டுக்கூத்துகளிலும் பாடியும், பழக்கியும் பலரது பாராட்டைப் பெற்றவர். மறைந்த இவரது முழுப்பெயர் பபிலோன் செபமாலை சின்னத்துரை ஆகும்.

# 1974 ல்
# விரிவுபடுத்தப்பட்ட எமது பணிகள்

யாழ். கத்தோலிக்க திருச்சபையை ஆயரான அதிவண. கலாநிதி பேரருள்திரு. வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை பொறுப்பேற்ற முற்காலப்பகுதி.

யாழ். மேற்றாசனத்தில் சகல பங்குத்தளங்களி லும் (மன்னார், யாழ்ப்பாணம் உட்பட) மருதமடு அன்னையின் திருச்சுரூபம், பவனியாக எடுத்து வரப் பட்டு, 24 மணித்தியாலங்கள் ஒவ்வொரு பங்கிலும் தங்க வைக்கப்பட்டு, வழிபாடுகள் நடாத்தப்படும் என்னும் அறிவித்தலை ஆயர் விடுத்தார். அதன் பிர காரம் மருதமடு அன்னையின் திருச்சுரூபப் பவனி ஆரம்பிக்கப்பட்டு, பவனி வரும் வழியில், 1974-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ம் திகதி (31-5-74) குருநகராம் எம் நகரில் பிற்பகல் 5 மணிக்கு அன்னை யின் திருச்சுரூபம் வரப்பெற்றது. அந்த வேளையில் பங்குத்தந்தையும் பங்கு மக்களும் ஆனந்தக் கண்ணீர் மல்க அன்னையை வரவேற்றனர். அன்று வந்த அன்னையை மறுநாள் (1-6-1994) பிற்பகல் சோகக் கண்ணீர் நிறைந்தவர்களாக வழியனுப்பி வைத்த னர். இவை எல்லாம் முடிந்த பின் பங்குத் தந்தை யின் பணிமனையில் கூடி இருந்தோம். அந்த நேரத் திலே தான் பங்குத் தந்தை ஓர் கேள்வியை முன் வைத்தனர். அன்னையின் வரவேற்புகள் எல்லாம் சிறப்பாக முடிந்தது. இனி என்ன செய்வோம் என்றார். எமக்கு அந்த கேள்வி ஓர் சுமையாகவே அமைந்தது நீண்ட நேரத்தின் பின் அவருக்கு ஓர் பதிலை கொடுத்தோம். ''மரியன்னை வந்தாள் மகனைத் தந்தாள்'' என்ற விருது வாக்குடன் அன்னையின் பவனியை மகனுடன் தொடர்வோம் என்றோம். மீண்டும் அது எப்படி என்றார். மருத மடு அன்னை எப்படி பங்குகள் தோறும் பவனி வந் தாளோ. அதேபோல் மகன் எமது பங்கில் உள்ள ஒவ்வொரு இல்லங்கள் தோறும் பவனி வரவேண் டும் என்றோம். அதாவது ஒவ்வொருஇல்லத் திலும் 24 மணித்தியாலம் திரு இருதயநாதரின் திருச்சுரூப மும் பரிசுத்த வேதாகமும் ஸ்தாபிக்பகப்பட வேண் டும். இதன் மூலம் ''வேதாகம வாசிப்பு பரவலாக்கப் பட வேண்டும் என்பதே எமது நோக்கு'' எனக் கூறி னோம். அதற்கு பங்குத் தந்தை கூறினார், ''இது நீண்ட நாட்கள் எடுக்கக் கூடிய ஓர் விடயம் மிகவும் சிரமமானது. எதற்கும் யோசிப்போம்'' என்றார். மீண்டும் பங்குத் தந்தையிடம் சொன்னோம். ''ஒருங் கிணைந்த பக்திச் சபைகளின் ஒன்றியம் உண்டு. இருதய சபையை வழி நடத்துவதற்கு முதன்மையாக வைத்து, மற்றைய சபைகளை வழிபாட்டிற்கு நிரைப் படுத்துவோம்'' எனக் கூறினோம். ஒருவாரம் ஓடி யது. இதைப்பற்றி எதுவிதமான முடிவும் இல்லை. மீண்டும் ஒருவாரம் சென்றது. ஒருநாள் பங்குத் தந்தை எம்மைச் சந்தித்தார். எப்போது எமது வழிபாட்டை ஆரம்பிப்பது என்று கேட்டவாறே எம்மை பங்கின் பணிமனைக்கு அழைத்துச் சென்று உள்ளே போய் பாருங்கள்'' என்றார். அதைப் பார்த்த போது பெரும் ஆச்சரியமும் அதிர்ச் சியுமாக இருந்தது. அது என்னவென்றால் திருச் சுரூபத்தை பவனியாக எடுத்துச் செல்வதற்காக அழ காக அமைக்கப்பட்ட சுரூபக்கூடுதான்.

இப்படியாக எல்லாம் ஆயத்தமாக இருந்த வேளை ''எமது சபையின் விழா அண்மித்திருந்த படியால் அதை முடித்து வழிபாட்டைத் தொடர் வோம் எனக் கூறி விழா முடிந்ததும் ஒழுங்கு செய் யப்பட்ட முறைப்படி இல்ல வழிபாட்டுப் பவனி ஆரம்பமாகியது. இப்படியாக ஆரம்பிக்கப்பட்ட வழிபாடு இரண்டு மூன்று ஆண்டுகளாக நீடிக்கப் பட்டது. நெடுங்காலம் நீடித்த இந்த வழிபாடு எவ்வித குறையுமின்றி நடப்பதற்கு பங்குத் தந்தை அருட்திரு. M. E. பயஸ் அடிகளாரின் சொல் லோடு கூடிய செயற்பாடும் திரு இருதய சபையின ரின் வழிநடாத்துதலும் பக்தி சபைகளின் ஒத்துழைப் பும் மிகவும் இன்றியமையாதது குறிப்பிடத்தக்கது. இக் காலத்தில் எமது பங்கில் பணியாற்றிய உதவிப் பங்குத்தந்தை அருட்திரு எஸ். கோமஸ், அருட்திரு மல்க்கம், மறை ஆசிரியர்கள் திரு. சாமிநாதர் ஆகியோரின் ஆர்வத்தோடு கூடிய பணியும் நினைவு கூரப்பட வேண்டிய ஒன்றாகும். இப்படியாக அன்று தொடங்கிய எமது விரிவு படுத்தப்பட்ட பணி எமது பங்கில் இற்றை வரைக்கும் தொடர்கிறது.

**கிறிசாந்து அல்வினஸ்**

★ ★ ★ ★ ★

**ஆலய அர்ச்சிப்பு**

ஆலயம் தாக்குதலுக்குள்ளாகிய பின் மக்களின் பேராதரவினால் வழிபாட்டுக்கேற்ற விதத்தில் ஆலயம் திருத்தப்பட்டு 15-7-1995 சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் அர்ச்சிக்கப்பட்டுத் திறக்கப்பட விருக்கின்றது.

# இதய தாகம் இருப்பார் வருக!

'நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?' என்றார் யேசு. அதற்கு இராயப்பர், ''ஆண்டவரே! நாங்கள் யாரிடம் போவோம்? முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன. நீரே கடவுளின் பரிசுத்தர்; இதை நாங்கள் விசுவாசிக்கின்றோம்.'' இந்த விசுவாசத்துடன் தான் குருநகராம் திருநகரில் திரு இருதய சபை அங்கத்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் செயற்பட்டு வருகின்றோம். யேசு, கலிலேயாக் கடலோரமாய்ப் போகையில் சீமோனும், இவருடைய சகோதரர் பெலவேந்திரரும் கடலில் வலை வீசிக் கொண்டிருப்பதைக் கண்டார். ஏனெனில், அவர்கள் மீன் பிடிப்பவர்கள். யேசு அவர்களைப் பார்த்து, ''என்பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிப்பவராய் இருக்கச் செய்வேன்'' என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு விட்டு அவரைப் பின்சென்றனர். மாற்கு: 1:17-18.

ஆரம்பத்தில் இச்சபை அங்கத்தவர்களில் பெரும்பான்மையானோர் கடற்தொழில் செய்பவர்களாகவே இருந்தனர். தற்போது இருக்கும் அங்கத்தவர்கள் பல்வேறு தொழில் புரிபவர்களாக இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் திரு இருதய நாதருக்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்களாகவே திகழ்கின்றனர். வயது வந்தவர்கள் மட்டுமல்லாது இளைஞர்களையும் சபையில் சேர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் சபையானது ஓய்வு நேரத்தில் மனதை வீண் பராக்குகளில் செலுத்தாமல் இருக்க விளையாட்டினை ஊக்குவித்தது. மென் பந்தாட்டம், கால்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரம், டாம், போன்ற விளையாட்டுக்களின் மூலம் இளைஞர்களை ஒன்றுபடச் செய்தது.

''அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம் தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்'' என்ற கவிஞனின் பாடலுக்கேற்ப திருஇருதய வாசிகசாலையானது ஞான அறிவு, பொது அறிவு நூல்கள் போன்றவற்றின் மூலம் ஞான அறிவுக்குத் தேவையான பத்திரிகைகள், சத்திய வேத பாதுகாவலன், சர்வ வியாபி, சஞ்சிகைகளாகிய கத்தோலிக்க சேவை, ஞானதூதன், திரு இருதயத் தூதன், நற்கருணை வீரன், போன்றவை மூலம் ஞான அறிவை வளர்த்தது. அது மட்டுமல்லாமல் பொது அறிவையும் வளர்த்தது.

கால ஓட்டத்தில் இந்நூற்றாண்டின் நவீனப் போரின் மத்தியிலும் அயராது உழைக்கும் எமது சபை, இப் பயங்கரத்தில் நின்று எம்மைக் காக்கவல்லது ''செபமும் தபமுமே'' என்று கூறுகின்றது அண்மைக்காலப் போரின் அனர்த்தங்களினால் எம்பங்கு மக்களில் பலர் இறந்தும், அங்கவீனர்களாயும், வீடு வாசல்களை இழந்தவர்களாகவும் அழகின் சிகரமாகிய ஆலயத்தை இழந்தவர்களாகவும் இருக்கின்றோம். தாங்கமுடியாத அழிவுகளின் மத்தியிலும் ''என்ன துன்பம் வந்தாலும் நான் என்றும் உன்னோடு'' என்ற வார்த்தைக்கமைய ஆலயத்தின் நடுவில் இருக்கும் திரு இருதய நாதரின் சுருபமே சான்று. இதைக் கண்ணுறும் எம் மக்கள் மனதில் யேசுவின் திரு இருதயத்தின் பால் அன்பு பிறக்க வேண்டும் என்பதே சபையின் பேரவா. ''விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவனாக்கப் பட்டவனே வாழ்வு பெறுவான்'' என்பதற்கமைய அழிவுகளின் மத்தியிலும் எம் விசுவாச வாழ்வு ஒடிந்து போய்விடக் கூடாது. இறை அரசைக் கட்டிக் காக்க திரு இருதயப் பக்தியை வளர்ப்போமாக, 'இறை இரக்கத்தினால் ஈர்க்கப்படுவோர் இரட்சிக்கப்படுவர்'' என்பதையுணர்ந்து பக்தியை வளர்க்கஇதய வீணையாகிய இறை அரசைத் தேடுவோமாக அதில் பங்கேற்க சபையில் இணைவோமாக.

''இதய தாகம் இருப்பார் வருக
இதயம் குளிர ஈவேன் நிறைய''
இறை அரசு நீடூழி வாழ்க.

எ. மைக்கல்

---

**மகா ஞானொடுக்கம்**

1996 ம் ஆண்டு பங்குனி மாதத்தில் ஒரு மகா ஞானவொடுக்கம் நடாத்த பங்குத் தந்தை அருட்திரு. R. M. G. நேசநாயகம் அடிகள் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. ம. வி. இ. இரவிச்சந்திரன் அடிகளின் உதவியுடன் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து வருகின்றார். இதனையொட்டி ஊக்குவிப்பாளர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# சபையின் வளர்ச்சியில் உழைத்தோர் வரிசையில் நினைவில் நிற்பவர்கள்

## மரணித்தோரில் சிலர்

மூப்பர்கள் M. இராசேந்திரம், M. பொன்னு, M. தம்பிப்பிள்ளை

மேஸ்திரிமார் கபிரியேற்பிள்ளை, மிக்கேல் மனவல், பரிகாரி S. நீக்கிலஸ் ஆகியோருடன்

| | | |
|---|---|---|
| பேதுறு செபமாலை | ஆசீர்வாதம் சிங்கராயர் | கபிரியேல் சாமி சவிரியான் |
| மலக்கியாஸ் மனவல் | (செல்லர் அல்லது மயிலர்) | எஸ். கிறிஸ்தோப்பர் |
| A. R. அயசன் | தீயப்பு பொன்னு | சி, சேவியர் |
| சி. அருளானந்தம் | அ. றிச்மண்ட் | சி. யோசேப்பு |
| வ. தி. குருசு | தா. எற்வேட் | சூ. விக்ரர் |
| ம. மருசலீன் | ம. லூயிஸ் | யோ. பங்கிராஸ் |
| யோ. ஜோர்ச் | அ. செல்வராசா | ஆ. மாட்டீன் |
| ஆ. சிங்கராயர் | செ. யோசேப்பு | இ. பிலிப்பு |
| ப. யோசேப்பு | யா. சிங்கராயர் | தா. தேவசகாயம் |
| சி, கபிரியல் | சி. பிலிப்பு | ஆ. ஞானப்பிரகாசம் |
| ஆ. றோமான் | அ. பிரான்சிஸ் | இன்னும் பலர். |

## மகிமை அங்கத்தவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| S. N. பயஸ் | செ. ச. அந்தோனிப்பிள்ளை | சந்தியோ மனவல் |
| P. M. பர்னாந்து | ச. அருளப்பு | F. H. S. யோண்பிள்ளை |
| தா. சேவியர் | யோ. செ. அல்போன்ஸ் | அ. கிறிஸ்தோ |
| தீ. ஸ்ரனிஸ்லாஸ் | ம. றோமான் | இ. அன்ரன் |
| கு. மனியல் | யோ. பிரான்சிஸ் | யோண் அன்ரனி கிளைவ் |
| ம. யூலியன் | சி. தார்சீசியஸ் | வ. பொனவெந்தூர் |
| கி. அல்ஸ்ரன் | யோ. தோமஸ்மூர் | இ. யூஸ்ரஸ் |
| M. அன்ரனி | சூ. கிறிஸ்ரி | D. V. அன்ரனி |
| கி. மா. நெல்சன் | ஜே. பசில் | ஜே. கிளமென்ரைன் |
| லா. ஜீவா | பி. றெஜி றேமன்ட் | றி. பசில் |
| ச. பங்கிராஸ் | அருட்திரு. அல்பன் இராசசிங்கம் அ. ம. தி. முதலியோர் | |

## காரிய அங்கத்தவர்கள் வரிசையில்

| | | |
|---|---|---|
| P. M. யேக்கப் | ச. மரியதாசன் | யோ. யோண் பப்ரிஸ்ற் |
| இ. டோறஸ் | ஞா. பிரான்சிஸ் | அ. எமிலியானுஸ் |
| மி. அஞ்சலோ | ப. யேசுதாசன் | அ. அ. பிரான்சிஸ் |
| கி. அல்வீனஸ் | மி. எமில் | அ. அலெக்சில |
| பி. ஸ்ரனிஸ்லாஸ் | அ. யேகராசா | ச. யஸ்ரின் |
| A. F. சேவியர் | பா. சிங்கராயர் | ச. சவிரியான் |
| அ. செலஸ்ரின் | சு. கிறிஸ்துராசா | J. R. A. செபஸ்ரியன் |
| அ. றி. யோண் யோகராசா | யூ. சுரேஸ்குமார் | யே. இக்னேசியஸ் |
| ம. குயின்ரன் | J. D. A. இராசசிங்கம் | |
| செ. ஜெயசீலன் | ச. பீற்றர் | ஆகியோர். |
| றோ. கிறிஸ்ரி | | |

# மலை மேலிட்ட தீபம்

கத்தோலிக்க மறை பரப்பும் மெய்ஞானப் பணியில் பக்திச் சபைகளின் செயற்பாடுகள் ஓர் முக்கிய காரணியாய் திகழ்வது வெள்ளிடைமலையாகும். இப்பணியில் யாழ் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கில் இயங்கும் திரு இருதய பக்திச் சபையானது கடந்த தொண்ணூறு ஆண்டுகளாக மலை மேலிட்ட தீபம் போன்று ஒளியும், ஒலியும் பரப்பி தன் பணியை ஆற்றி வருவது குருநகர் மக்கள் மட்டுமன்றி சகல கிறீஸ்தவ மக்களும் அறிந்ததே.

மனித அங்கங்களில் இருதயம் முக்கியமானது. இருதயத்துக்கும் சிந்தனைக்கும் தொடர்புண்டு. எமது கத்தோலிக்க ஞான வாழ்வுக்கும் திரு இருதய பக்திச் சபைக்கும் தொடர்பு அது போன்றதே கடந்த தொண்ணூறு ஆண்டுகளாக இப் பக்திச் சபையானது ஆத்மீகப் பணியில் மாத்திரமன்றி கல்வி, கலாச்சாரம், பொது வாழ்வு போன்ற சகல துறைகளிலும் செயல் பட்டு குருநகர் மக்களிற்கு செய்து வந்துள்ள சேவையை மெச்சாமல் இருக்க முடியாது.

தொண்ணூறு வருடங்களல்ல, தொளாயிரம் வருடங்கள் ஏன் உலகில் வேவாகம வார்த்தை எவ்வகையில் அழிவில்லாததோ அதே போன்று என்றென்றும் வளர வேண்டி வாழ்த்துகிறோம்.

அ. அலெக்சிஸ்

---

# நன்றி நவிலல்

சபையின் வளர்ச்சிக்கு உதவிய

- ஆன்மீக ஆலோசகர்கள் பங்குத்தந்தையர்
- பெரியோர்கள்
- அன்பர்கள்
- ஆதரவாளர்கள்
- மகிமை / காரிய அங்கத்தவர்கள்

அனைவருக்கும்

இம்மலரை வெளியிட உதவிய

- விளம்பர அன்பளிப்பாளர்கள்
- விடயதானம் செய்தோர்
- அச்சகத்தார்
- ஆலோசனை வழங்கியோர் பல விதத்திலும் உதவியோர்

எல்லோருக்கும்

நன்றி கலந்த திருநாள் வாழ்த்துகள் உரித்தாகுக

மலர்க் குழுவின் சார்பில்
ப. யேசுதாசன்
செயலாளர்

2 - 7 - 1995

---

## அலங்காரப் பொருட்கள்

சபையின் நாடகங்களுக்குத் தேவையான அலங்காரப் பொருட்களைச் செய்விப்பதில் மேஸ்திரி கபிரியேற்பிள்ளை, மூப்பர் மு. தம்பிப்பிள்ளை, மேஸ்திரி மி. மனவல் போன்றோர் முன்னின்று உழைத்துள்ளனர்.

## சற்பிரசாத நாதருக்கு அரச கொலு

ஆண்டு தோறும் பெரிய வியாழக்கிழமை பூசை முடிவில் தேவநற்கருணை பவனியாக எடுத்துவரப்பட்டு புனித சூசையப்பர் பீடத்தில் ஆராதனைக்கு வைக்கப்படுவது வழக்கம்.

இதனையொட்டி சற்பிரசாத அரசருக்கு மதிப்புக் கொடுக்கும் விதத்தில் சபையினர் அரச கொலு அமைப்பது வழக்கம்.

# பங்கில் பணியாற்றும் சபைகள்

| சபையின் பெயர் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| **ஆலயச் சபைகள்** | | | |
| புனித யாகப்பர் ஆலயம் பங்குச்சபை | அருட்தந்தை R. M. G. நேசநாயகம் | கிறிஸ்தோப்பர் | மி. ராசா |
| புதுமை மாதா ஆலயம் ,, | அருட்தந்தை R. M. G. நேசநாயகம் | அ. யேசுதாசன் | C கிறிஸ்தோப்பர் |
| புனரமைப்புச் சபை | அருட்தந்தை R. M. G. நேசநபயகம் | C. M. நெல்சன் | றோ. அன்ரனி |
| **பக்திச் சபைகள்** | | | |
| திரு இருதய சபை | இ. டோறஸ் | ப. யேசுதாசன் | மி. எமில் |
| புனித வின்சென்டிபோல் (ஆண்கள்) | E. L. S. மரியாம்பிள்ளை | இ. டோறஸ் | R. யோண் யோகராசன் |
| புனித வின்சென்டிபோல்( பெண்கள்) | கொ. எலிசபேத் | யோ. வரவணிக்கா | யோ. யோசேப்பின் |
| இறை இரக்கம் | ஸ். சாந்தா | ஜெ. ஜெயசீலி | அ. யூலியானா |
| மாசில்லா மாதா | கி. புஸ்பராணி | யோ. செபமாலை | கி. நிர்மலா |
| மரியாயின் சேனை (ஆண்கள்) | M. மரியசூசை | J. J. றிட்ச்வே | E. J. பின்ரன் |
| மரியாயின் சேனை (பரலோகத்தின் வாசல்) | ஜோ. செபமாலை | ஜே. கொன்சி | அ. யூலியானா |
| மரியாயின் சேனை (சக்தியுடையது) | தி. ஜேட்றூட் | எ. லூர்த்துநாயகி | ஆ. லொயாலா |
| மரியாயின் சேனை (வரப்பிரசாதத்தின் மாதா) | மி. டியன்சி | அ. நிரோஜினி | கெ. நிலாவதி |
| புனித சூசையப்பர் கூட்டம் | E. L. S. மரியாம்பிள்ளை | J. J. றிட்ச்வே | ஞா. பிரான்சிஸ் |
| திருப்பாலத்துவ சபை | எ. மாகிறேற் | J. யூயின் | ஜெ. மரியா |
| ஞானப்பிரகாசியார் கூட்டம் | J. ஜெயறஞ்சன் | சி. அருள்தாசன் | ம. கெலாசயஸ் |
| சிசிலியா பாடகர் குழாம் | த. மேரியசிந்தா | கி. டிலிசியா | கி. அல்போனசா |
| மறை ஆசிரியர் சங்கம் | மி. சாஸ்ஜினி | செ. கொண்சலா | A. யூஜின் |
| இளைஞர் மன்றம் | யே. இக்னேஷயஸ் | ம. சாம் பிரதீபன் | ஜெந்திரன் |
| மகளீர் மன்றம் | J. யூஜின் | இ. அனா | ஜெ. விமலா |

* * *

விளம்பர அன்பளிப்பாளருடன் மலருக்கு அன்பளிப்புச் செய்தோர் வரிசையில் :

யோ. செ॰ அல்போன்ஸ் (மகிமை அங்கத்தவர்), J. நேசன் (ரவிதா களஞ்சியம்) முதலியோருக்கு நன்றி.

திரு இருதய சபையின் ஆண்டு விழா

சிறக்க வாழ்த்துகிறோம்.

★

**கௌரி சுவையகம்**

**415, பீச்றோட்,**
**குருநகர்,**
**யாழ்ப்பாணம்.**

திரு இருதய சபையின்

**90 - வது ஆண்டு நிறைவினை யொட்டி**

சபையினருக்கு

எமது உளம் கனிந்த வாழ்த்துகள்.

★

**ரெத்தினா ஸ்ரோர்ஸ்**

**287, பாங்சால் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## முதல் வியாழன் இரவுத்திருமணித்தியாலம்

1931 ம் ஆண்டு முதல் ஆசியாவிலேயே எமது பங்கிலேதான் மாதத்தின் முதல் வியாழக்கிழமைகளில் இரவு நேரத்தில் திருமணித்தியாலம் நடை பெற்று வந்தது.

1975 ம் ஆண்டுப் பிற்பகுதியில் பங்கில் பணியாற்றியவர்கள், பலர் பங்குபற்றிய இவ்வாரதனையை நிறுத்த முற்பட்டனர். இதனை ஆட்சேபித்து சபை தீர்மானம் நிறைவேற்றி பங்குத்தந்தைக்கும், யாழ் மறைமாவட்ட ஆயருக்கும் 10 - 3 - 1976 ல் மகஜர் அனுப்பியது. இது செவிடன் காதில் ஊதிய சங்க நாதமாயிற்று. இத்திருவிழிப்பு ஆராதனையை மீண்டும் நடைமுறைக்கு வருவதை மக்கள் ஆசிக்கின்றனர்.

திரு இருதய சபையின் ஆண்டு விழா
சிறக்க வாழ்த்துகிறோம்.

## நல்லையா அன் சன்ஸ்

(அந்தியகால சேவை)

— பிரேதப் பெட்டி, மலர்வளையம், பிரேத ஊர்தி, எம்பாமிங் —

**உரிமையாளர்: நல்லையா டுஷான்**

**120, பிரதான வீதி, — யாழ்ப்பாணம்.**

வாழ்த்துகிறோம்!

பீங்கான், ரம்ளர், தண்ணீர் ரம்லர்,
ஐஸ்கிறீம் கப்ஸ், பிளாஸ்ரிக் பாய்கள்,
சில்வர் றே, தண்ணீர் செம்புகள்,
கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள்

வாடகைக்குப் பெற்றுக்கொள்ள

## உதயம்

574 A, கடற்கரை வீதி,
குருநகர்.

வாழ்த்துகிறோம்!

## முருகன் வணிக நிலையம்

பொறிக் கருவி,
நிறக்கலவை விற்பனைக் கூடம்.

295, (21) இளங்கோ தெரு,
யாழ்ப்பாணம்.

திரு இருதய சபையின்
90 - வது ஆண்டு நிறைவினை யொட்டி
சபையினருக்கு
எமது உளம் கனிந்த வாழ்த்துகள்.

# மனோகரனும் வெற்றிவேலும்
( பொறியியலாளர் — ஒப்பந்தகாரர் )

தலைமை :
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.

கிளை :
60, அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு இருதய சபையின் ஆண்டு விழா
சிறக்க வாழ்த்துகிறோம்.



# சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை
பலாலி வீதி,
திருநெல்வேலி, — யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: ம பாலச்சந்திரன்,

**ஜனாதிபதி மாளிகையில் கடற் சாரணர்**

யாழ். புனித கிறிஸ்தோப்பர் கடற் சாரணர் குழு அகில இலங்கைச் சமூக சேவைக்கான கடற் சவால் கேடயத்தை இராணி மாளிகையில் இலங்கை ஜனாதிபதியிடம் பலமுறை பெற்று யாழ். நகருக்கும் குருநகருக்கும் பெருமை தேடித்தந்த குழுவாகும்.

திரு இருதய சபையின் ஆண்டு விழா

சிறக்க வாழ்த்துகிறோம்.

சகல விதமான மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ள

*

## றொபேட் மோட்டர்ஸ்

**15, செம்மா தெரு, — யாழ்ப்பாணம்.**

**உரிமையாளர்: R. தர்மானந்தன்**

அன்னை அச்சகம், குருநகர், யாழ்ப்பாணம்.

*With the best compliments*

*from*

*

# RIO ICE CREAM

Product :

**RATNAM INDUSTRIAL ORGANIZATION**

75, BANKSHALL STREET,

JAFFNA.